# DEPOSITION OF WITNESS
## In the Court of Judicial Magistrate No.I, Mettur
## Case No : M.C.No.19/2022

Prosecution witness : ம.சா.2        **Date : 13.10.2023**

| | |
|---|---|
| **Name : சசிகுமார்** | Caste : MBC |
| **Father's Name : ரங்கசாமி** | Calling : Cooly |
| Village : புதுவேலமங்கலம் | Religion : Hindu |
| Taluk : மேட்டூர் | Age : 47 |

( Petitioner present. Respondent absent. Filed 317 CrPC petition and allowed)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி மனுவில் மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சி ஆவேன். நான் எனது தரப்பு முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**குறுக்கு விசாரணை**

1) என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் நானும் எதிர்மனுதாரரும் ஆவோம். என் அப்பா ரங்கசாமி வீரப்பன் வழக்கில் எத்தனை ஆண்டுகாலம் சிறையில் இருந்தார் என்றால் 4, 5 வருடங்கள் சிறையில் இருந்தார். அந்த காலகட்டத்தில் எங்கள் குடும்பம் மிகுந்த சிரமத்தில்தான் இருந்தது என்றால் சரிதான். என்னுடைய அப்பா போலிசுக்கு பயந்து அடிக்கடி வெளியூர் சென்றுவிடுவார் என்றால் சரிதான். என் அம்மாதான் எங்கள் இருவரையும் பராமரித்து படிக்க வைத்தார் என்றால் சரிதான். நான் ஐடி படித்துள்ளேன். என் அண்ணன் தேவராஜ் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்துவிட்டு B.Com., தபாலில் படித்தார். என் அப்பா அம்மாவிற்கு என் மனைவியோ, அல்லது என் அண்ணன் மனைவியோ பராமரித்து வருகிறார்களா என்றால் அவர்கள் தனியாக இருக்கிறார்கள். பூர்விக தோட்டத்தை அவர்கள்தான் பார்த்துக்கொண்டு உள்ளார்கள். நல்லது கெட்டது என்றால் போய் வருவோம்.

2) என் அம்மாவிற்கு என்ன வயது என்றால் 70 வயது இருக்கும் என் அப்பாவிற்கு 75 வயது இருக்கும். என் அப்பாவை அழைத்து விசாரித்தால் நான் அவர்களை நல்லமுறையில் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்வாரா என்றால் சொல்வார். எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்தது குறித்து காவல்நிலையத்திலோ ஊர் பஞ்சாயத்திலோ புகார் கொடுத்துள்ளோமா என்றால் ஊர் பஞ்சாயத்தில் சொல்லியுள்ளோம். ஊர் பஞ்சாயத்தில் யாரிடம் புகார் கொடுத்தோம் என சொல்லமுடியுமா என்றால் நல்லசாமி என்பவரிடம் சொன்னோம். என் மாமனார் வீட்டார் நல்ல வசதியான குடும்பமா என்றால் சுமாரான வசதியுள்ளவர்கள். என் மனைவிக்கும் மனுதாரருக்கும் எவ்வளவு பவுன் எங்கள் மாமனார் வீட்டில் போட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் வரதட்சணையாக ஏதாவது வாங்கினேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரருக்கு வரதட்சணை கொடுத்தார்களா என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. மனுதாரரின் மகன் என்ன படிக்கிறார் என்றால் B.E., (EEE) மூன்றாம் ஆண்டு படிக்கிறார். ஒரு வருடத்தில் அவர் வேலைக்கு சென்றுவிடுவார் என்றால் மேல் படிப்பு படிப்பாரா என்று எனக்கு தெரியாது. எதிர்மனுதாரரை அடித்ததாக என் மீதும் என் மனைவி மற்றும் மனுதாரர் மீது கொளத்தூர் காவல்நிலையத்தில் வழக்கு பதிவுசெய்து மேட்டூர் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து பைசல் செய்யப்பட்டதா என்றால் புகார் கொடுக்கப்பட்டது உண்மைதான். பைசல் செய்து நகைகளை மனுதாரர் திரும்ப பெற்றுக்கொண்டார். எதிர்மனுதாரர் மது அருந்திவிட்டு ரகளை செய்வது குறித்து நான் எதிர்மனுதாரரிடம் பேசியுள்ளேனா என்றால் இல்லை. பேசினால் பிரச்சினை வரும் என்பதால் பேசவில்லை. எதிர்மனுதாரர் பிரச்சினை செய்வது குறித்து என் அப்பாவிடம் பேசியுள்ளேனா என்றால் பேசியுள்ளேன். எதிர்மனுதாரருக்கு மாதம் ரூ.1 லட்சம் வருமானம் வருவதற்கு ஆதாரமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3) பல பெண்களை எதிர்மனுதாரர் வீட்டிற்கு கூட்டி வந்ததாக சொல்லியுள்ளதால் அவர்களின் பெயர் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் எதிர்மனுதாரரை அடித்துவிட்டு தற்போது எதிர்மனுதாரர் பெற்றோர் பராமரிப்பில்தான் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடைய கொழுந்தியா மாதேஸ்வரி, காமதேனு ஆகியோர்களிடமிருந்து நகைகளை பெற்றுதான் என் அண்ணன் தோட்டம் வாங்கினார் மேற்படி நகைகளை அவரவர்களிடமே எதிர்மனுதாரர் திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் அவரை பராமரித்துக்கொள்ளவே வருமானம் இல்லை என்றும் அவருக்கு ஒரு கால் அடிப்பட்டு சரியாக இயங்குவதில்லை என்றும், தற்போது விபத்து ஏற்பட்டு கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சை எடுத்துக்கொண்டு உள்ளார் என்றும், எதிர்மனுதாரரை அவரது பெற்றோர்கள்தான் பராமரித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்கும் ஜீவனாம்சம் வழங்க எதிர்மனுதாரருக்கு எந்தவித வருமானமும் கிடையாது என்றால் சரியல்ல. எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டுர்.**